**செம்பாக்கம் நகராட்சியில் 30.8.2019ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்டு 2019 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 519 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி பகுதியல் வார்டு எண்.12ல் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) இருந்த இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Bio–Mining பணிகள் சென்னை அண்ணா பல்கலைகழக சுற்றுச்சூழ்ல் கல்வியியல் மையத்தின் கண்காணிப்பின் கீழ் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17731/2019/பி3 நாள் 14.8.2019ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) அமைந்துள்ள பகுதியில் உள்ள நீராதரங்களை மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகம் மூலம் பகுப்பாய்வு செய்து அறிக்கை பெற்று அனுப்பி வைக்குமாறும், அதன் நகலினை தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சியின் வார்டு எண்.12ல் குப்பை சேகரிப்பு மையம் (Dumpsite) இருந்த இடத்தில் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்படும் ஆழ்துளை கிணற்றில் நீர் பகுப்பாய்வு (Water Analysis Report) செய்து அறிக்கை வழங்குவதற்கான கட்டணத் தொகை ரூ.4710/- மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், மறைமலை நகர் காஞ்சிபுரம் மாவட்டம் அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.520 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013 பராமரிப்பு பணி மற்றும் ஐந்து உருளைகள் புதியதாக மாற்றம் செய்யும் பொருட்டு தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை

ஒப்படைத்து பணி முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.92000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.521 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் டெங்கு தடுப்பு பணியாளர்கள் 55 பேர் Municipal TATA ACE 6 Compactors 3 and are 1 Open Tipper Lorryகளுக்கு 1.3.2019 முதல் GPS Vehicle Tracking and DBC's Tracking System through SIM Card நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் ஆய்வு கூட்டத்தில் வலியுறுத்தி உடன் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் நகர மன்ற ஒப்புதல் பெற்று உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏற்கனவே நாகர்கோவில் நகராட்சியில் மேற்கொண்டு நல்ல பயன் கிடைக்கப்பெற்றிருப்பதால் அதன் அடிப்படையில் DBC's மற்றும் வாகனங்களுக்கு தேவையான SIM CARD நகராட்சி மூலம் வாங்கி வழங்கி அப்பணிகளை நகராட்சி மூலம் கண்காணித்து நல்லதொரு பணி முன்னேற்றத்தை ஏற்பபடுத்திட ஆகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து உத்தேச செலவு ரூ.375000/- (ஆறு மாதத்திற்கு) மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.437 நாள் 31.1.2019ல் அனுமதி பெறப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனமான Softbery Solutions, S-70, 120 feet road, Soodamanipuram, Karaikudi-630003 என்கிற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர் மன்ற தீர்மானம் எண். 454 நாள் 28.2.2019ல் ஒப்புதல் பெறப்பட்டு அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் ஜுலை 2019 மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. எனவே, புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்துவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு ஆணையரின் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.522 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால்

போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக கடந்த 2016 முதல் 55 DBC டெங்கு தடுப்பு பணியார்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2016 மற்றும் 2018 டெங்கு இல்லா செம்பாக்கம் நகராட்சி என்றளவில் DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் தொடர்ந்து கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 15.10.2019ம் தேதியுடன் முடிவடைவதால் மாற்று ஒப்பந்ததாரரை நியமனம் செய்து தொடர்ந்து பணி தொய்வின்றி மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்கான 180 நாட்களுக்குண்டான செலவினத் தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.523 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் 15 வார்டு பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் சுமார் 50000க்கு மேற்பட்ட மக்கள் தொகை வசித்து வருகிறார்கள். மேலும் 12 பள்ளிகளில் 11500க்கு அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்களுக்கு டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்கும் விதமாக ஆண்டிற்கு நான்கு முறை சுழற்சி முறையில் நில வேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் இயக்குநர், பொது சுாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை தீவிரப்படுத்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் நிலவேம்பு பவுடர் 250கி அரசு நிறுவனமான டாம்கால் நிறுவனம் அல்லது தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.524 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பு ஊசி போடும் பணிகளை புளூ கிராஸ் ஆப் இந்தியா என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பு ஊசி போடும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக நிர்ணயித்த கட்டணம் ஒரு நாய்க்கு ரூ700/–வீதம் தோராய செலவினமாக ரூ.2.00 இலட்சத்தற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறதுது

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. தெரு நாய்களை ப்ளூ கிராஸ் நிறுவனம் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.525 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் கீழ் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள நச்சுக் கழிவு நீர் தொட்டியின் வாயு வெளியேற்றும் குழாயில் மேற்பகுதியின் வழியாக கொசுக்கள் உள் சென்று உற்பத்தி மற்றும் நோய் பரப்புவதை தடுக்கும் விதமாக குழாயினை சுற்றி நைலான் வலை அமைத்தல் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் மொத்தம் 17000க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் அமைந்துள்ளது. இக்குடியிருப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் கணக்கீடு செய்ததால் இதன் தோராய செலவினம் ரூ.700000/- ஆகும். எனவே, திருத்தப்பட்ட தோராய செலவின மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான நைலான் வலைகள் வாங்கிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.526 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

2019-20ம் வருடத்திற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் இயக்குநர், நோய்தடுப்பு மற்றும் மருந்துதுறை, சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக்

கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதாரப் பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த தேவையான கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.6.00 இலட்சம் ஆகும்.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.527 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

பம்மல் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. என். நாகராஜன், துப்புரவு பணியாளர் இந்நகராட்சிக்கு பணியிட மாறுதல் கேட்டு விண்ணபித்துள்ளார். இந்நகர மன்றத்தின் இசைவு கேட்டு வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பம்மல் நகராட்சியின் துப்புரவு பணியாளர் திரு. என். நாகராஜன் என்பவரை இந்நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணி மாறுதலுக்காக, இசைவு தெரிவித்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.528 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 28.8.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அம்பேத்கார் தெரு பொது கிணறு, மாரியம்மன் கோயில் தெரு பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, முத்தாரம்மன் கோயில் தெரு பொது | 2.50 | அருணாச்சலம் இன்பிராஸ்ட்ரக்சர் டெவலப்பர்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிணறு ஆகிய இடங்களில் உள்ள நீர்மூழ்கி மின் மோட்டார் பழுது பார்த்தல் மற்றும் பொது கிணறுகளின் மேல் வலை அமைத்தல் பணி | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |
| 2 | நகராட்சி பகுதியில் உள்ள தெருக்களுக்கு ஒளிரும் தெரு பெயர் பலகை (Reflective Street Name Board) விநியோகம் செய்து நிறுவுதல் பணி | 9.90 | சைன்டெக் இன்டஸ்ட்ரீஸ் | மதிப்பீட்டை விட 0.30% குறைவு |
| | | | ஹைடெக் அட்வர்டைசிங் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |
| 3 | வார்டு எண்.14 நேத்தாஜி தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். சதீஷ் குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 4 | வார்டு எண்.3 ஜெயேந்திரர் நகர் மெயின் ரோடில் ஆழ்துளை கிணறு அமைத்து, நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 3.60 | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ் குமார் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.529 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 30.8.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.14 நேத்தாஜி 1வது குறுக்கு தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 2 | செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருமலை நகர் பூங்கா, விஜிபி சீனிவாசா நகர் பூங்கா, எம்.ஜி.ஆர். நகர் பூங்கா, அப்துல்கலாம் தெரு பூங்கா மற்றும் ராதே ஷியாம் அவென்யு பூங்கா ஆகிய இடங்களில் | 8.50 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதியதாக சிறுவர் விளையாட்டு சாதனங்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி மற்றும் ராதே ஷியாம் அவென்யு பூங்காவில் ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் பழுது பார்த்தல் பணி | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 3 | காமராஜபுரம் நகராட்சி சமுதாய நலக்கூடம் மற்றும் உணவு கூடம் பழுது பார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பணி | 3.50 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.10% அதிகம் |
| 4 | தாரகேஸ்வரி நகர் 3வது தெரு, அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்கா மற்றும் காந்தி நகர் அண்ணா தெருவில் ஆழ்துளை கிணற்றிற்கு புதியதாக நீர்மூழ்கி மின் மோட்டார் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி | 3.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 0.90% அதிகம் |
| 5 | வேளச்சேரி சாலை முதல் சாம்ராஜ் நகர் வரை சிமெண்ட் சாலை இருபுறம் GSB நிரப்பும் பணி | 2.00 | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.530 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள் 20 நபர்களுக்கும், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு 2019–20ம் ஆண்டிற்கு சீருடைகள் வழங்கிடவும், அவற்றை Entyce / தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் லிட் (Co-optex) சென்னை 8 நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்துக் கொள்ளவும் விலைப்பட்டியலின் படி தொகை அந்நிறுவனத்திற்கு காசோலை மூலம் வழங்கி சீருடை பெற்று பணியாளர்களுக்கு வழங்கிடவும், அதற்கான தையற் கூலி வழங்கிடவும், தேராய செலவின மதிப்பீடு தொகை ரூ.150000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** சீருடைகளை Entyce / தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் லிட் என்கிற நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கிடவும், அதற்கான தையற்கூலி வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.531 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**ஒப்பம்/------**

திருமதி. மு. ரா. வசந்தி
தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி